


**31. 12. 2025**

தலைப்புச் செய்திகள்

1. மின்னணு வர்த்தக வலைதளம், டிஜிட்டல் வணிகத்தை பரவலாக்கி, ஆக்கப்பூர்வமான மாற்றங்களை கொண்டு வந்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

2. ஒரே பாரதம் உன்னத பாரதத்தை நோக்கமாக கொண்டு காசி சங்கமத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார்.

3. வளர்ச்சியடைந்த பாரத பாதையில் சீர்த்திருத்தங்களுடன் புதிய அத்தியாயத்தை அரசு படைத்தள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் குறிப்பிட்டார்.

4. 2026 ஆங்கில புத்தாண்டு நாளை மலர்வதை ஒட்டி முதலமைச்சர்
திரு. மு. க. ஸ்டாலின் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

5. துனீஷியாவில் சர்வதேச டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் சௌஹான் இன்று களமிறங்குகிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

பியூஷ் கோயல்

மின்னணு வர்த்தகத்திற்கான வெளிப்படையான வலைதளம், டிஜிட்டல் வர்த்தகத்தை பரவலாக்கி, நாட்டின் வணிக நடைமுறைகளில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை கொண்டுவந்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுமையான சிந்தனைகள், படைப்பாற்றல் திறன், ஒருங்கிணைப்பு போன்ற நடவடிக்கைகளால் அனைவரும் வர்த்தகத்தில் பங்கேற்க இத்தளம் வகை செய்வதோடு, உற்பத்தி பொருட்களும் இலகுவான முறையில் சந்தை படுத்தப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

இதனால் விற்பனையாளர்களும் நுகர்வோர்களும் பயனடைந்ததோடு, சிறிய வணிகர்களும், டிஜிட்டல் தளத்தை அணுக வழிகோலப்பட்டதாக எடுத்துரைத்தார்.

2022-ம் ஆண்டு தொடங்கப்பட்ட மின்னணு வர்த்தகத்தளம் சரக்கு சேவை பரிமாற்றங்களை முன்னெடுத்ததோடு, மின்னணு சாதனங்கள் விற்பனையும் அமோகமாக நடைபெற வழிவகை செய்ததாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

தர்மேந்திர பிரதான்

காசி தமிழ் சங்கமம் நிகழ்வு கலை, பண்பாடு கலாச்சாரத்திற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி அளிக்கும் முக்கியத்துவத்தை பிரதிபலிப்பதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், காசி சங்கம நிகழ்வில் ஏராளமானோர் பங்கேற்றதாக கூறினார்.

எதிர்காலத்தில் ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற அடிப்படையில் எதிர்காலத்தில் இச்சங்கமத்தின் கீழ் ஏராளமான கலை கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்

காசிக்கும் தமிழகத்திற்கும் இடையே தொன்றுதொட்டு வரும் பிணைப்பை எடுத்துரைக்கும் வகையில் இவ்விழா நடைபெற்றதாக அவர் தெரிவித்தார்.

பழமையான சிறப்பு மிகு கோவில்களுடனும், கலை கலாச்சாரங்களுடனும் தமிழகம் மேலும் புதிய உச்சங்களை எட்ட வேண்டும் என்று கூறிய அமைச்சர், பாரம்பரிய கலாச்சார மரபு சார்ந்த மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்வதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

எல். முருகன்

வளர்ச்சியடைந்த பாரத பாதையில் வரலாற்று சிறப்பு மிகு சீர்த்திருத்தங்களை மேற்கொண்டு புதிய அத்தியாயத்தை இந்த ஆண்டு அரசு படைத்தள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

2026-ம் ஆண்டிற்கான மத்திய அரசின் நாட்காட்டியை புதுதில்லியில் இன்று அறிமுகம் செய்து பேசியஅவர், உள்ளடக்கிய வளர்ச்சி, வலுவான பொருளாதார மீட்சி, வளர்ச்சிக்கான நிலையான அடித்தளம் போன்றவற்றை உறுதிசெய்யும் வகையில் அரசின் சீர்த்திருத்தங்கள் அமைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய, தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு. சஞ்சய் ஜஜு மத்திய அரசின் முன்னுரிமைகளை பிரதிபலிக்கும் வகையிலும் அரசின் தொடர்பு இணைப்பு கருவியாகவும் இந்த நாள்காட்டி திகழ்வதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

CBSE

CBSE 10, 12-ம் வகுப்பு பொது தேர்வுகள் வரும் பிப்ரவரி 17-ம் தேதி தொடங்கவுள்ள நிலையில் மார்ச் 3-ம் தேதி நடைபெறவிருந்த தேர்வுகள் நிர்வாக காரணங்களுக்கான மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இதன்படி 3-ம் தேதி நடைபெறவிருந்த 10-ம் வகுப்பு தேர்வு மார்ச் 11-ம் தேதியும்,

12-ம் வகுப்பு தேர்வு, ஏப்ரல் 10-ம் தேதியும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளி தலைமை ஆசிரியர்கள் தேர்வு தேதி மாற்றங்களை மாணாக்கருக்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

பரிக்ஷா பே சர்ச்சா

மாணாக்கரின் தேர்வு மன அழுத்தத்தை களையும் வகையில் பிரதமரின் பரிக்ஷா பே சர்ச்சா இணையதள பதிவில் சாதனை அளவாக 3 கோடிக்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில் பங்கேற்க மாணாக்கர், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் பெருமளவில் ஆர்வம் காட்டி வருவது இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை பறைசாற்றுவதாக அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டின் வளர்ச்சி பாதையில் அரசின் கொள்கைகள் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் சீர்திருத்தங்களின் ஆண்டாக மேம்பட்டுள்ள நிலையில், உற்பத்தி துறையில் உலகளாவிய புதிய உந்து சக்தியாக இந்தியா உருவெடுத்தது குறித்த சிறப்பு செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

நம்நாடு தொழில் மற்றும் பொருளாதார பிரிவுகளில் 7.8 சதவிகித வளர்ச்சியுடன் வேகமாக வளரும் சந்தையாகவும், உலகளாவிய உற்பத்தி மையமாக உருவெடுத்து சாதனை படைத்துள்ளது.

நொய்டாவில் இந்த ஆண்டு தொடங்கப்பட்ட Temper Glass கைப்பபேசி தொடுத்திரைக்கான இலகுரக கண்ணாடி உற்பத்தி மையம் மூலம் உற்பத்தியின் அடுத்த

கட்டத்திற்குள் நம் தேசம் நுழைந்து சாதனை படைத்துள்ளது.

எரிசக்தி பிரிவில் சூரிய மின்சக்தி உற்பத்தி திறன் 100 ஜிகாவாட் என்ற மைல்கல்லை எட்டியது :

சூரிய மின்சக்தி தொகுப்புகளின் உற்பத்தி இந்த ஆண்டு 100 ஜிகா வாட்டாக சாதனை அளவாக உயர்ந்தது.:

மத்திய அரசின் சீரிய நடவடிக்கைகளால் தூய்மை எரிசக்திக்கான இலக்கு 5 ஆண்டுகளுக்கு முன்னதாகவே எட்டப்பட்டதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

.. பிரதமர் வாய்ஸ் ..

விமான போக்குவரத்து துறையில் இந்த ஆண்டு 2 ஆயிரத்து 200 புதிய விமானங்கள் இணைக்கப்பட்ட நிலையில் இன்னும் 5 ஆண்டுகளில் பயணிகளின் போக்குவரத்து 630 மில்லியனாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மின்னணு தொழில்துறைகளில் வளர்ச்சி காரணமாக வேலை வாய்ப்பின்மை விகிதமும் 5 சதவிகிதமாக குறைந்துள்ளது.

பிரதமரின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளால் நல்லாட்சிக்கான கட்டமைப்பு மேம்பட்டு 2 அடுக்கு சரக்கு சேவைவரி அறிமுகத்தால் பொருட்களின் விலை குறைந்து உற்பத்தியாளர்கள் பயனடைந்து வளர்ச்சி முன்னெடுத்து செல்லப்படுகிறது.

.. பிரதமர் வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>புத்தாண்டு</u>

2026 ஆங்கில புத்தாண்டு நாளை மலர்வதை ஒட்டி முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அனைவரது வாழ்விலும் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தும் ஆண்டாகவும், அமைதியும், நல்லிணக்கமும், வெற்றிகளும் தழைத்தோங்கும்

ஆண்டாகவும் புத்தாண்டு திகழட்டும் என வாழ்த்தியுள்ளார்.

புத்தாண்டை ஒட்டி அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்று நள்ளிரவு சிறப்பு பிரார்த்தனைகளும், ஆராதனைகளும் நடைபெறுகின்றன.

புத்தாண்டிற்காக வேளாங்கண்ணி பேராலயம் களைகட்டி உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

திருக்கோவில்களின் நடை நாளை அதிகாலையிலேயே திறக்கப்பட்டு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுகின்றன.

வழிபாட்டுத் தலங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கான சிறப்பு வழிகாட்டு நெறிமுறைகளை மாநில காவல்துறை வகுத்துள்ளது.

மீறுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

<u>விஸ்வநாத தாஸ்</u>

வெள்ளை கொக்கு பறக்குதடி பாப்பா என்ற பாடலை பாடி சுதந்திர வேட்கையை தூண்டிய விடுதலை போராட்ட தியாகி விஸ்வநாத தாஸின் நினைவுதினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

மதுரை திருமங்கலத்தில் அமைந்துள்ள அன்னாரது நினைவு இல்லத்தில் அவரது திருவுருவச்சிலைக்கு மாநில அரசின் சார்பில் மாவட்ட வருவாய் அலுவலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖

விருது

2025-ம் ஆண்டிற்கான வாக்காளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு குறித்த சிறந்த பிரச்சாரத்திற்கான ஊடக விருதிற்கு வரும் 7-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அச்சு ஊடகம், தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா 4 விருதுகள் வரும் 26-ம் தேதி, தேசிய வாக்காளர் தினத்தன்று வழங்கப்படவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் மத்திய அரசின் கிராம மின்மயமாக்கல் திட்டத்தின் கீழ் செஞ்சிலுவை சங்கத்திற்கு வழங்கப்பட்ட நடமாடும் மருத்துவ வாகனத்தை ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி துவக்கி வைத்தார்.

மருத்துவர், மருந்தாளுநர், செவிலியர் ஆகியோருடன் இவ்வாகனம் கிராமங்களுக்கு சென்று இலவச மருத்துவ சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்படும் என்றார்.

தமிழக அரசின் இ-சேவை மற்றும் ஆதார் சேர்க்கை மையங்கள் பராமரிப்பு மற்றும் தணிக்கை பணிகள் காரணமாக இன்றும் நாளையும் செயல்படாது என அரசு கேபிள் டிவி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பொங்கல் பரிசு தொகுப்பிற்கான டோக்கன் விநியோகிக்கும் பணிகள் நாளைமறுநாள் தொடங்கவுள்ள நிலையில் தமிழக கூட்டுறவு சங்க பதிவாளர் தெரிவித்துள்ளார்.

நாள் ஒன்றுக்கு 200 குடும்ப அட்டைதாரர்களுக்கு சுழற்சி முறையில் பொங்கல் தொகுப்பை விநியோகிக்கப்பட உள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் வனப்பரப்பை 33 சதவிகிதமாக அதிகரிக்கும் வகையில் மரக்கன்றுகள்

நடும்பணி நடைபெற்று வருவதாக ஆட்சித்தலைவர் திருமதி. மிருனாளினி தெரிவித்துள்ளார்.

விருப்பமுடையோர் வனத்துறை அலுவலகத்தை தொடர்புகொண்டு இலவச மரக்கன்றை பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

துனீஷியாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் சௌஹான் – நெதர்லாந்தின் Edward Etty-யை இன்றுமாலை எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖